அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 06/2004

எனது இல தா/9/6//48
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07,
2004.12. 15 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

<u>தாபன விதிக்கோவையின் **XLVIII** ஆம் அத்தியாயத்தை திருத்துதல்.</u>

தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை பின்வருமாறு திருத்த வேண்டுமென அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி தற்போது குற்றப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணைகளை பாதியாதவாறு தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயம் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

I. XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 ஆம் உபபிரிவில் தற்போது உள்ள ஏற்பாடுகளுக்குப் பதிலாக பின்வரும் ஏற்பாடுகளை உள்ளடக்குதல்.

19:5 அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள அத்துடன் தனது சேவைக் காலத்திற்குள் தாபன விதிக்கோவையின் முதலாம் அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றமொன்றுக்கு தண்டிக்கப்படாத பதவிநிலை அலுவலரொருவராக பத்து வருடங்கள் அல்லது அதைப்பார்க்க கூடிய சேவைக்காலத்தை உடைய அலுவலரொருவர் அல்லது ஒழுக்காற்று விசாரணை அலுவலராகவோ அல்லது வழக்குத்தொடுக்கும் அலுவலராகவோ அல்லது எதிர்காப்பு அலுவலராகவோ ஐந்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றி அனுபவம் பெற்றுள்ள பதவிநிலை தரமொன்றில் எட்டு வருடங்கள் சேவையாற்றி உள்ள ஓய்வுபெற்ற அலுவலர்களையும் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுடைய சட்டத்தரணிகளையும் கொண்ட ஓர் ஒழுக்காற்று விசாரணை அலுவலர் சேர்மம் அரசாங்க நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான செயலாளரால் தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு திருத்திக்கொண்டு தொடர்ந்து நடாத்திச் செல்ல வேண்டும். அதேபோன்று குறித்த விசாரணைக் குழு தொடர்பான விபரங்களை இடையிடையே அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு எழுத்தில் அறிவிப்பதும் அரசாங்க நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான செயலாளரின் பொறுப்பாகும்.

II. 22:1 உபபிரிவுக்குப் பின் 22:1:1 ஆக பின்வரும் பிரிவை சேர்த்தல்.

22:1:1 குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரொருவருக்கு எதிராக குற்றப்பத்திரமொன்று வழங்கி ஒரு வருடத்திற்குள் உரிய விசாரணையை முடிவுறுத்தி ஒழுக்காற்றுக் கட்டளை வழங்குவதற்கு ஒழுக்காற்று அதிகாரி வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும். 31:11 உபபிரிவில் குறிப்பிட்டுள்ள ஒரு குற்றச்சாட்டு அல்லாதவிடத்து குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் தாமதத்தால் விசாரணை தாமதப்படும் சந்தர்ப்பத்தை தவிர வேறு ஏதேனுமொரு விடயத்தால் அவ்வாறு விசாரணையை முடிவுறுத்தி ஒழுக்காற்றுக் கட்டளை வழங்க ஒரு வருடத்திற்கு மேல் காலதாமதம் ஏற்படுமாயின் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் பணித்தடைக்கு ஆளாகியும் இருப்பின் அவரை மீளச் சேவையில் அமர்த்தி அன்று தொடக்கம் சம்பளம் செலுத்த வேண்டும். அதுவரை செலுத்தப்படாத சம்பளங்கள் தொடர்பில் ஒழுக்காற்றுக் கட்டளை கிடைத்தபின் அதில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்பட வேண்டும்.

I. 27:10 பிரிவுக்குப் பின் 27:10:1 மற்றும் 27:10:2 ஆக பிரிவுகளை சேர்த்தல்.

27:10:1 இலஞ்சம் அல்லது ஊழல் அல்லது அரசாங்க விரோத அல்லது பயங்கரவாத செயல்களுடன் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தவிர்ந்த அலுவலரின் கடமையுடன், தொடர்புபடாத ஒரு குற்றவியல் தவறு தொடர்பில் 'திமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவிடத்து குற்றச்சாட்டின் தன்மையின்படி அலுவலரை மீளச் சேவையில் அமர்த்தலானது அரச சேவையில் நன்மைக்கு பாதகமாக அமையாதென ஒழுக்காற்று அதிகாரி தீர்மானிப்பாராயின் அத்தகைய நபரை மீளச் சேவையில் அமர்த்த வேண்டும்.

27:10:2 27:10:1 ஆம் உடப்பிரிவின்படி மீளச் சேவையில் அமர்த்தலானது அரசாங்க சேவையின் நன்மைக்கு பாதகமாக அமையுமென ஒழுக்காற்று அதிகாரி கருதுவாராயின் 'திமன்றத் தீர்ப்பு கிடைக்கும் வரை தொடர்ந்தும் அத்தகைய நபரின் பணித்தடை செய்யப்பட வேண்டும். அத்தகைய நபரொருவர் தொடர்பில் 'திமன்றத் தீர்ப்பு கிடைப்பதற்கு ஒரு வருடத்திற்கு மேலாக காலமெடுக்குமாயின் அலுவலருக்கு சம்பளத்தில் அரைவாசிக்கு மேற்படாத தொகையை செலுத்த ஒழுக்காற்று அதிகாரி அதிகாரம் அளிக்கலாம்.

II. 31:12 பிரிவுக்கு பின் 31:12:1 ஆக பின்வரும் பிரிவை உள்ளடக்குதல்.

31:12:1 27:10:2 உடப்பிரிவில் குறிப்பிடடுள்ள ஒரு தறுவாயில் ஒரு வருட காலத்திற்குள் 'திமன்றத் தீர்ப்பு கிடையாவிட்டால் அலுவலரின் மாதாந்த சம்பளத்தில் அரைவாசிக்கு மேற்படாத தொகையை அவருக்குச் செலுத்துவதற்கு ஒழுக்காற்று அதிகாரி அதிகாரம் அளிக்கலாம்.

ஒப்பம்: எஸ்.சீ.மான்னப்பெரும,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு